सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 14 फिब्रारी, 1994/1916 शक

New Delhi, Monday, 14th February 1994

*புது தில்லி, 1994ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் தேதி, திங்கட்கிழமை*


## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi.

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி.*

The translation in Tamil of the Partition Act, 1893 (4 of 1893), The Drugs (Control) Act, 1950 (26 of 1950), The Hindu Succession Act, 1956 (30 of 1956), The Employer's Liability Act, 1938 (24 of 1938), The Equal Remuneration Act, 1976 (25 of 1976), The Indecent Representation of Women (Prohibition) Act, 1986 (60 of 1986), The Hindu Minority and Guardianship Act, 1956 (32 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பாகப்பிரிவினைச் சட்டம், 1893 (4/1893), மருந்துப்பொருள்கள் (கட்டுப்பாடு) சட்டம், 1950 (26/1950), இந்து இறங்குரிமைச் சட்டம், 1956 (30/1956), பணியமர்த்துநர்களின் கடப்பாட்டுச் சட்டம், 1938 (24/1938), சமமான பணியூதியச் சட்டம், 1976 (25/1976), மகளிர் தம்மை இழிவுபடுத்திக்காட்டுவதைத் (தடையுறுத்தும்) சட்டம், 1986 (60/1986), இந்து இளவர் நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956 (32/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின் படி இவையே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

31/10—1

# இந்து இறங்குரிமைச் சட்டம், 1956

(சட்ட எண் 30/1956) [17, ஜுன் 1956]

இந்துக்களிடையே உயிலில்லாவழி இறங்குரிமை தொடர்பான சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கும் தொகுத்தமைப்பதற்குமான சட்டம்.

இந்தியக் குடியரசின் ஏழாவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :—

## அத்தியாயம் I

### முகவுரை

1. (1) இந்தச் சட்டம், இந்து இறங்குரிமைச் சட்டம், 1956 என்று வழங்கப்பெறும். *குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை.*

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

2. (1) இந்தச் சட்டம் பின்வரும் நபர்களுக்குப் பொருந்துறுவதாகும். *இந்தச் சட்டத்தின் பொருந்துறுகை.*

(அ) இந்து சமய வழியில், அதன் நெறியமைவுகள் அல்லது வளர் நெறியங்கள், இவற்றில் ஏதொன்றிலும் அடங்கிய வீரசைவராகவோ லிங்காயத்தாகவோ அல்லது, பிரம, பிரார்த்தன அல்லது ஆரிய சமாஜத்தைச் சார்ந்தவராகவோ உள்ள இந்து ஒருவர்.

(ஆ) சமய வழியில் பௌத்தராக, சமணராக அல்லது சீக்கியராக உள்ள நபர் எவரும் ;

(இ) சமய வழியில், முஸ்லீமாக, கிறித்தவராக, பார்சியாக அல்லது யூதராக இல்லாத பிற நபர் எவரும் ; ஆனால், அந்த நபர், இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், இதில் கூறப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எவற்றைப் பொறுத்தும், இந்துச் சட்ட நெறியில் அல்லது அச்சட்டநெறியின் பகுதியாக இருக்கும் வழக்கம் அல்லது வழக்காறு எதனின் ஆளுகையிலும் வராதவர் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**விளக்கம்.**—பின்வரும் நபர்கள், நேர்வுக்கேற்ப, சமய வழியில் இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் அல்லது சீக்கியர்கள் ஆவர்.

(அ) சமய வழியில் இந்துக்களாக, பௌத்தர்களாக, சமணர்களாக அல்லது சீக்கியர்களாக இருக்கும் பெற்றோர் இருவருக்கும் முறைமண வழியிலோ முறைமணமில்லா வழியிலோ பிறந்த குழந்தை எதுவும் ;

(ஆ) முறைமண வழியில் பிறந்த அல்லது முறைமணமில்லா வழியில் பிறந்த குழந்தையின் பெற்றோர்களில் ஒருவர் சமய வழியில் இந்துவாக, பௌத்தராக, சமணராக அல்லது சீக்கியராக இருந்து, அவர் சார்ந்திருக்கிற அல்லது சார்ந்திருந்த பழங்குடி, சமூகம், வகுப்பினம், குடும்பம் இவற்றில் ஏதொன்றிலும் உறுப்பினராக வளர்க்கப்பட்ட குழந்தை எதுவும் ;

(ஆஆ) முறைமண வழியில் அல்லது முறைமணமில்லா வழியில் பிறந்த குழந்தை, தன் தந்தையாலும் தாயாலும் கைவிடப்பட்டிருந்த நேர்வில், அல்லது தன் பெற்றோர்கள் பற்றி தெரிந்திராத நேர்வில், ஓர் இந்துவாக, பௌத்தராக, சமணராக அல்லது சீக்கியராக வளர்க்கப்பட்ட குழந்தை எதுவும் ;

(இ) இந்து, பௌத்த, சமண அல்லது சீக்கிய சமயத்திற்கு மாறிய அல்லது மீண்டும் மாறிவந்துள்ள நபர் எவரும் ;

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக பிறவாறு பணித்தாலன்றி, இந்தச் சட்டத்திலுள்ள எதுவும், அரசமைப்பின் 366ஆம் உறுப்பின் 25ஆம் கூறின் பொருள் வரையினுள் வருகிற பட்டியலில் கண்ட பழங்குடி ஏதொன்றின் உறுப்பினர்களுக்கும் பொருந்துறாது.

(அ) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒன்றிய நிலவரையான பாண்டிச்சேரியை சார்ந்திருந்து, தம் இனமுறைச் சட்டத்தைத் துறந்து, பிரஞ்சு குடியியல் சட்டத்தை ஏற்றவர்களுக்கு இந்தச் சட்டத்திலுள்ள எதுவும் பொருந்துறாது ;

(3) இந்தச் சட்டத்தின் பகுதி எதிலும் உள்ள '' இந்து '' என்னும் சொல், சமய வழியில் ஒருவர் இந்துவாக இல்லாதபோதிலும், இந்தப் பிரிவில் அடங்கியுள்ள வகையங்கள் காரணமாக இந்தச் சட்டம் அவருக்குப் பொருந்துறுகிறவிடத்து, அந்த நபரையும் உள்ளடக்குவதாகவே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பொருள் வரையறைகள் மற்றும் பொருள்கோள்.**

3. (1) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,

(அ) '' ஆண் வழி உறவினர் '' ஒருவர் மற்றொருவருக்கு, குருதி அல்லது மகவேற்பு மூலம், முற்றிலுமாக ஆண்கள் வழியில் மட்டுமே உறவுடையவராயிருப்பின், அவ்விருவரும் ஒருவருக்கொருவர் ஆண்வழி உறவினர் என்று சொல்லப்பெறுவர் ;

(ஆ) '' அளிய சந்தானச் சட்டம் '' என்பது, இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், சென்னை அளிய சந்தானச் சட்டம், 1949 இன் அல்லது இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள பொருட்பாடுகள் பொறுத்த வழக்காற்று அளிய சந்தானச் சட்டத்தின் ஆளுகையில் வந்திருக்கும் நபர்களுக்குப் பொருந்துறும் சட்டமுறை என்று பொருள்படும் ;

(இ) '' பெண் இடையிட்ட வழி உறவினர் ''—ஒருவர் மற்றொருவருக்கு, குருதி அல்லது மகவேற்பு மூலம், முற்றிலுமாக ஆண்கள் வழி மட்டுமேயில்லாத உறவுடையவராயிருப்பின், அவ்விருவரும் ஒருவருக்கொருவர் '' பெண் இடையிட்ட வழி உறவினர் '' என்று சொல்லப்பெறுவர் ;

(ஈ) '' வழக்கம் '' மற்றும் '' வழக்காறு '' என்னும் சொற்கள், வட்டாரப் பரப்பு எதிலும், பழங்குடி, சமூகம், குழுவினம் அல்லது குடும்பம், இவற்றில் ஏதொன்றிலும் உள்ள இந்துக்களிடையே தொடர்ந்து ஒரே சீராக நீண்டகாலம் பின்பற்றப்பட்டிருந்து, அதனால் சட்டநெறியின் ஆற்றலைப் பெற்றிருக்கும் விதிமுறை எதனையும் குறிக்கும் :

வரம்புரையாக : அந்த விதிமுறை நிச்சயத்தன்மை உடையதாகவும், அறிவுக்கு முரணானதாக இல்லாததாகவும் அரசுக் கொள்கைக்கு எதிராக இல்லாததாகவும் இருத்தல் வேண்டும் ;

மேலும் வரம்புரையாக : ஒரு குடும்பத்துக்கு மட்டுமே பொருந்துறும் ஒரு விதியாக இருக்கும் நேர்வில், அது அந்தக் குடும்பத்தால் பின்பற்றப்படாது கைவிடப்பட்டதாக இருத்தல் ஆகாது ;

(உ) '' ஒரே தந்தை தாய் வழி உறவு ''
'' ஒரே தந்தை இரு தாய் வழி உறவு '' மற்றும்
'' ஒரே தாய் இரு தந்தை வழி உறவு ''—

(i) இரு நபர்கள், பொது முன்னோரான ஒரு தந்தைக்கும் அவருடைய ஒரு மனைவிக்கும் பிறந்தவர்களாக இருப்பார்களாயின், அவர்களிடையே உள்ள உறவு '' ஒரே தந்தை தாய் வழி உறவு '' எனப்படும். அவர்கள், பொது முன்னோரான ஒரு தந்தைக்கும் அவருடைய வெவ்வேறு மனைவியர்களுக்கும் பிறந்தவர்களாக இருப்பார்களாயின், அவர்களிடையே உள்ள உறவு '' ஒரே தந்தை இரு தாய் வழி உறவு '' எனப்படும்.

(ii) இரு நபர்கள் பொது முன்னோரான ஒரு தாய்க்கும் அவளுடைய வெவ்வேறு கணவன்களுக்கும் பிறந்தவர்களாக இருப்பார்களாயின், அவர்களிடையே உள்ள உறவு '' ஒரே தாய் இரு தந்தை வழி உறவு '' எனப்படும் ,

விளக்கம்—இந்தக் கூறில் ''மூதாதையர்'' என்பது தந்தையையும் '' பெண் மூதாதையர்'' என்பது தாயையும் உள்ளடக்கும்;

(ஊ) ''இறங்குரிமையர்'' என்பது உயில் எழுதி வைக்காமல் இறந்துபோகிற ஒருவரின் சொத்தினை இந்தச் சட்டத்தின்படி இறங்குரிமையாகப் பெறுவதற்கு உரிமைகொண்டுள்ள ஆண் அல்லது பெண் எவர் ஒருவரும் என்று பொருள படும்.

(எ) ''உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவர்'' ஆணாகவோ, பெண்ணாகவோ உள்ள நபர் ஒருவர் தன் சொத்தினைப் பொறுத்துச் செயல்திறம் பெறக்கூடிய ஓர் உயில்வழி ஏற்பாட்டினைச் செய்துவைக்காமல் இறந்துபோவா ராயின், அவர் அந்தச் சொத்தினைப் பொறுத்து ''உயில் எழுதி வைக்காமல் இறந்துபோனவர்'' எனக் கொள்ளப்பெறுவார்;

(ஏ) ''மருமக்கள்தாயச் சட்டம்'' என்பது,—

(அ) இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள பொருட்பாடுகள் பொறுத்து, சென்னை மருமக்கள்தாயச் சட்டம், 1932, திருவிதாங்கூர் நாயர் சட்டம், திருவிதாங்கூர் ஈழவர் சட்டம், திருவி தாங்கூர் நாஞ்சில் நாடு வேளாளர் சட்டம், திருவிதாங்கூர் க்ஷத்திரியர் சட்டம், திருவிதாங்கூர் கிருஷ்ணன்வகா மருமக்கள்தாயச் சட்டம், கொச்சி மருமக்கள்தாயச் சட்டம், அல்லது கொச்சி நாயர் சட்டம், இவற்றில் ஏதொன்றின் ஆளுகையிலும் வந்திருக்கக்கூடிய நபர்களுக்கும்;

(ஆ) 1956 நவம்பர் முதல் தேதியை ஒட்டி முன்பு இருந்த திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் அல்லது சென்னை மாநிலத்தில் பெருமளவை நிலைவாழ்விடமாகக் கொண்டிருந் தவர்களின் சமூகத்தைச் சார்ந்திருந்து, இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள பொருட்பாடுகளைப் பொறுத்து, பெண் வழியில் இறங்குறவு கொண்ட இறங்குரிமைமுறையின் ஆளுகையில் வந்திருக்கக்கூடிய நபர்களுக்கும் ;

பொருந்துறும் சட்டமுறை என்று பொருள்படும்; ஆனால், அது அளிய சந்தானச் சட்டத்தை உள்ளடக்குவதில்லை;

(ஐ) ''நம்பூதிரிச் சட்டம்'' என்பது இந்தச் சட்டம் இயற்றப்பட்டி ராவிட்டால், இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள பொருட்பாடுகளைப் பொறுத்து, சென்னை நம்பூதிரிச் சட்டம், 1932, கொச்சின் நம்பூதிரிச் சட்டம், திருவிதாங்கூர் மலையாள பிராமணர் சட்டம், இவற்றில் ஏதொன்றின் ஆளுகை யிலும் வந்திருக்கக்கூடிய நபர்களுக்குப் பொருந்துறும் சட்டமுறை என்று பொருள்படும்;

(ஒ) ''உறவு கொண்ட'' என்பது முறைப்படியான குருதி உறவு கொண்ட என்று பொருள்படும் :

வரம்புரையாக : முறைமணமில்லா வழியில் பிறந்த குழந்தைகள், தம் தாயுடனும் தம்முன் ஒருவரோடு ஒருவருடனும் உறவு கொண்டவர்களாகக் கொள்ளப்பெறுவர்; அவர்களுக்கு முறைமணவழியில் பிறந்த வழித்தோன்றல்கள், அவர்களுடனும் அவ்வழித்தோன்றல்கள் ஒருவரோடு ஒருவருடனும் உறவு கொண்டவர்களாகக் கொள்ளப்பெறுவர்; உறவுமுறையைச் சுட்டுகின்ற அல்லது உறவினர் ஒருவரைக் குறிக்கின்ற சொல் எதுவும் அவ்வாறே பொருள்கொள்ளப் படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி, ஆண் பாலைக் குறிக்கின்ற சொற்கள் பெண்களையும் உள்ளடக்குவதாக எடுத்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

4. (1) இந்தச் சட்டத்தில், தெரிநிலையாகப் பிறவாறு வகை செய்யப்பட்டிருந் தால் அல்லாமல்,— சட்டத்தின் மேலோங்கு செல்திறன்.

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு செல்லாற்ற லிலுள்ள இந்துச் சட்டத்தின் வாசகம், விதி அல்லது பொருள்கோள் எதுவும், அல்லது அச்சட்டத்தின் பகுதியான வழக்கம் அல்லது வழக்காறு எதுவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள பொருட்பாடு எதனையும் பொறுத்துச் செயல்விளைவு அற்றதாகும்.

(ஆ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு செல்லாற்ற லிலுள்ள பிற சட்டம் எதுவும், அது இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள வகையங் களில் எதற்கும் ஒவ்வாதிருக்கின்ற அளவுக்கு இந்துக்களுக்குப் பொருந்துறுதல் அற்றதாகும்.

(2) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், வேளாண்மை நிலங்களைச் சிறு கூறுகளாக்குவதைத் தடுப்பதற்கு அல்லது நில உச்சவரம்புகளை நிருணயிப்பதற்கு அல்லது அந்த நிலங்களைப் பொறுத்த குத்தகை உரிமைகளை வழிமுறையில் அடைவிப்பதற்கு வகைசெய்கிற, நிலவுறு சட்டம் எதனின் வகையங்களையும் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது என்று, இதன் மூலம் ஐயப்பாடுகளை அகற்றுவதன் பொருட்டு விளம்பப்படுகிறது.

## அத்தியாயம் II

## உயிலில்லாவழி இறங்குரிமை

### பொதுவியல்

**குறித்தசில சொத்துக்களுக்கு இச்சட்டம் பொருந்துறாது.**

5. இந்தச் சட்டம்—

(i) தனிவகைத் திருமணச் சட்டம், 1954 இன் பிரிவு 21 இல் அடங்கியுள்ள வகையங்களின் காரணமாக இந்திய இறங்குரிமைச் சட்டம், 1925 ஆல் இறங்குரிமை முறைப்படுத்தப்பட்ட சொத்து எதனுக்கும்;

(ii) இந்திய அரசாங்கத்துடன் இந்திய ஆட்சிக் குறுநிலமன்னர் எவருடனும் செய்துகொண்ட இணக்க ஒப்பந்தம் அல்லது உடன்பாடு எதனின் வரையுரைகளின்படியோ இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு இயற்றப்பட்ட சட்டம் எதனின் வரையுரைகளின்படியோ இறங்குரிமையர் ஒருவருக்கு மட்டுமே இறங்குமுறையில் வந்தடைந்த உரிமைச் சொத்து எதற்கும்;

(iii) கொச்சி மன்னரால் சாற்றாணையிடப்பட்ட 1949 ஆம் ஆண்டு சூன் 29 ஆம் தேதியிட்ட பொது அறிவிக்கையால் (IX/1124) வழங்கப்பட்ட அதிகாரத்தின் காரணமாக, அரண்மனை நிருவாக வாரியத்தால் நிருவகிக்கப்படும் வலியம்மா தம்பிரான் கோயிலகச் சொத்தினுக்கும் அரண்மனை நிதியத்திற்கும்

பொருந்துறாது.

**பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் உள்ள உரித்தத்தின் இறங்கடைவு.**

6. இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்னர் இந்து ஆண் ஒருவர் இறந்துபோகும்போது, அச்சமயத்தில், மிதாஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அவர் ஓர் உரித்தம் கொண்டிருக்குமிடத்து, அந்தச் சொத்தில் அவருக்குள்ள அவ்வுரித்தம், பிறப்புவழி பங்குரிமையர்களில் எஞ்சியுள்ளவர்களுக்கு எஞ்சுரிமைவழி இறங்கடைவு உறுமே அன்றி, இந்தச் சட்டத்தின்படி அல்ல :

வரம்புரையாக : இறந்துபோனவர், இணைப்புப்பட்டியலின் வகை 1இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு பெண் உறவினரையோ அந்தப் பெண் உறவினர் மூலம் உரிமைகோருகிறவராய் வகை 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஓர் ஆண் உறவினரையோ, தமக்குப்பின் எஞ்சியுள்ளவராக விட்டுச் சென்றிருந்தால், மிதாஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அந்த இறந்துபோனவரின் உரித்தம், இந்தச்சட்டத்தின்படி, நேர்வுக்கேற்ப, உயில்வழி அல்லது உயிலில்லாவழி இறங்குரிமை முறைப்படி இறங்கடைவு உறுவதாகும்.

விளக்கம் 1.—இந்தப் பிரிவைப் பொறுத்தவரை, மிதாஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் உரிமை கோருகிற இந்து ஒருவருக்குள்ள உரித்தம் என்பது அச்சொத்தில் அவர் பாகப்பிரிவினை கோருவதற்கு உரிமை கொண்டிருந்தாலும் இல்லாவிடினும், அவரது இறப்பை ஒட்டி முன்பு அச்சொத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் அவருக்கு அச்சொத்தில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பங்காகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

விளக்கம் 2.—இந்தப் பிரிவின் வரம்புரையில் அடங்கியுள்ள எதுவும், இறந்துபோனவரின் இறப்புக்கு முன்னர் பிறப்புவழி பங்குரிமை கொண்டிருந்த குடும்பத்திலிருந்து பிரிந்து சென்றுவிட்ட நபர் ஒருவரை அல்லது அவரது இறங்குரிமையர்களில் எவர் ஒருவரையும், உயில் எதுவும் எழுதப்படாத நிலையில் அவ்வரம்புரையில் குறிப்பிடப்பட்ட உரித்தத்தில் ஒரு பங்கினைக் கோருவதற்கு இயல்விப்பதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

7. (1) இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், மருமக்கள்தாயம் அல்லது நம்பூதிரிச்சட்டம் பொருந்துறும் இந்து ஆண் அல்லது பெண் ஒருவர், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு இறந்துபோகும் சமயத்தில், ஒரு தரவாடு, தாவழி அல்லது இல்லம் இவற்றில் ஏதொன்றின் சொத்திலும் ஓர் உரித்தம் கொண்டிருப்பாராயின், அந்தச் சொத்தில் அவருக்குள்ள அவ்வுரித்தம் உயில்வழி அல்லது உயிலில்லாவழி இறங்குரிமை முறைப்படி இறங்கடைவு உறுமே அன்றி, மருமக்கள்தாயம் அல்லது நம்பூதிரிச் சட்டத்திற்கிணங்கிய வகையில் அல்ல.

தரவாடு, தாவழி, குடும்பம், காவரு அல்லது இல்லம் இவற்றில் ஏதொன்றின் சொத்திலுமுள்ள உரித்தம் இறங்கடைவு வேண்டிய முறை.

விளக்கம்:—இந்த உட்பிரிவைப் பொறுத்தவரை, தரவாடு, தாவழி அல்லது இல்லம் இவற்றில் ஏதொன்றின் சொத்திலும் இந்து ஆண் அல்லது பெண் ஒருவருக்குள்ள உரித்தம் என்பது, அவருக்குப் பொருந்துறும் மருமக்கள்தாயம் அல்லது நம்பூதிரிச் சட்டத்தின்படி பாகப்பிரிவினை கோருவதற்கு அவர் உரிமை கொண்டிருந்தாலும் இல்லாவிடினும், அவரது இறப்பை ஒட்டி முன்பு, தரவாடு, தாவழி அல்லது இல்லம் இவற்றில் ஏதொன்றிலும் அப்போது உயிருடனிருக்கும் தரவாடு, தாவழி அல்லது இல்லம் உறுப்பினர்கள் அனைவரிடையேயும் தலைக்கொரு பங்கு என்னும் அடிப்படையில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் அவர் அடையக்கூடிய பங்கு எனக் கொள்ளப்படுதல் வேண்டும் ; அந்தப் பங்கு அவனுக்கு அல்லது அவளுக்கு முழுதுரிமையாகச் சேர்ந்தடைய ஒதுக்கப்பட்டதாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், அளிய சந்தானச் சட்டம் பொருந்துறும் இந்து ஆண் அல்லது பெண் ஒருவர், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு இறந்துபோகும் சமயத்தில், குடும்பம் அல்லது காவரு சொத்தில் பிரிபடா ஓர் உரித்தம் கொண்டிருப்பாராயின், அந்தச் சொத்தில் அவருக்குள்ள உரித்தம் உயில்வழி அல்லது உயிலில்லாவழி இறங்குரிமை முறைப்படி இறங்கடைவு உறுமே அன்றி, அளிய சந்தான சட்டத்திற்கு இணங்கிய வகையில் அல்ல.

விளக்கம்.—இந்த உட்பிரிவைப் பொறுத்தவரை, குடும்பம் அல்லது காவரு சொத்தில் இந்து ஆண் அல்லது பெண் ஒருவருக்குள்ள உரித்தம் என்பது, அவருக்குப் பொருந்துறும் அளியசந்தானச் சட்டத்தின்படி பாகப்பிரிவினை கோருவதற்கு அவர் உரிமைகொண்டிருந்தாலும் இல்லாவிடினும் அவரது இறப்பை ஒட்டி முன்பு குடும்பம் அல்லது காவரு சொத்தில் அப்போது உயிருடனிருக்கும் குடும்ப அல்லது காவரு உறுப்பினர்கள் அனைவரிடையேயும், தலைக்கொரு பங்கு என்னும் அடிப்படையில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் அவர் அடையக்கூடிய பங்கு எனக் கொள்ளப்படுதல் வேண்டும் ; அந்தப் பங்கு அவனுக்கு அல்லது அவளுக்கு முழுதுரிமையாகச் சேர்ந்தடைய ஒதுக்கப்பட்டதாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இந்த உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்னர் ஸ்தானம்தார் ஒருவர் இறந்துபோகும்போது, அவரிடம் இருந்த ஸ்தானச் சொத்து, அந்த ஸ்தானம்தார் இறப்பதை ஒட்டி முன்பு அவருக்கும், அப்போது உயிருடனிருக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையே தலைக்கொரு பங்கு என்ற அடிப்படையில் பிரிப்பட்டுவிட்டதைப்போன்றே, அந்த ஸ்தானம்தார் சார்ந்திருந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் அவருடைய இறங்குரிமையர்களுக்கும் இறங்கடைவாக உறுவதாகும் ; அவரது குடும்பத்தினரும், ஸ்தானம்தாரின் இறங்குரிமையர்களும், தங்களின் சொந்த சொத்தாகவே கருதி, அவற்றை வைத்து வருவதல் வேண்டும்.

விளக்கம்.—இந்த உட்பிரிவைப் பொறுத்தவரை, ஸ்தானம்தார் ஒருவரின் குடும்பம், இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிட்டால், வழக்கம் அல்லது வழக்காறு காரணமாக ஸ்தானம்தார் என்ற நிலைக்கு அடுத்து வரக்கூடிய உரிமையுடைய ஆண் உறுப்பினர்களைக் கொண்ட, அக்குடும்பத்திலிருந்து பிரிவினை ஆன அல்லது ஆகாத கிளை ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்.

8. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோகிற இந்து ஆண் ஒருவனின் சொத்து, இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்கு இணங்க இறங்கடைவு உறுவதாகும் :—

ஆண்களாக இருக்கும் நேர்வில் இறங்குரிமைப் பொது விதிகள்.

(அ) முதலாவதாக, இணைப்புப்பட்டியலின் வகை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உறவினர்களான இறங்குரிமையர்களுக்கு ;

(ஆ) இரண்டாவதாக, வகை I ஐச் சார்ந்த இறங்குரிமையர் எவரும் இல்லாதிருப்பின், அப்போது, இணைப்புப்பட்டியலின் வகை II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உறவினர்களான இறங்குரிமையர்களுக்கு ;

(இ) மூன்றாவதாக, அந்த இருவகைகளையும் சார்ந்த இறங்குரிமையர் எவரும் இல்லாதிருப்பின் அப்போது இறந்துபோனவரின் ஆண் வழி உறவினர்களுக்கு ;

(ஈ) கடைசியாக, ஆண்வழி உறவினர் எவரும் இல்லாதிருப்பின், அப்போது, இறந்துபோனவரின் பெண் இடையிட்ட வழி உறவினர்களுக்கு.

இணைப்புப் பட்டியலிலுள்ள இறங்குரிமையர்களிடையே இறங்குரிமை வரிசை முறை.

9. இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள இறங்குரிமையர்களில் வகை I இல் உள்ளவர்கள் அடைவது உடன் நிகழ்வதாகவும் பிற இறங்குரிமையர்களை விலக்கியும் இருக்கும் ; வகை II இல் முதல் பதிகையில் உள்ளவர்கள் இரண்டாம் பதிகையில் உள்ளவர்களை விட முன்னுரிமை பெறுவர் ; இரண்டாம் பதிகையில் உள்ளவர்கள், மூன்றாம் பதிகையில் உள்ளவர்களைவிட முன்னுரிமை பெறுவர் ; இவ்வாறே முன்னுரிமை தொடரும்.

இணைப்புப் பட்டியலின் வகை Iஇல் உள்ள இறங்குரிமையர்களிடையே சொத்துப் பகிர்ந்தளிப்பு.

10. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் சொத்து, இணைப்புப் பட்டியலின் வகை Iஇல் உள்ள இறங்குரிமையர்களிடையே, பின்வரும் விதிகளுக்குகிணங்க, பகிர்வு செய்யப்படுதல் வேண்டும்:—

விதி 1.—உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் விதவை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளிருப்பின், அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பங்கினைப் பெறுவர் ;

விதி 2.—உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவருக்குப் பின்னர் வாழும் அவருடைய மகன்கள், மகள்கள், தாயார் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒரு பங்கினைப் பெறுவர் ;

விதி 3.—உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவருக்கு முன்னர் இறந்துபோன அவருடைய மகனின் அல்லது மகளின் இறங்குரிமையர்களைக் கொண்ட கிளைவழி ஒவ்வொன்றும் ஒரு பங்கினைப் பெறும் ;

விதி 4.—விதி 3இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்கு எதுவும்—

(i) முன்னதாக இறந்துபோன மகனின் கிளைவழி இறங்குரிமையர்களிடையே, அவனுடைய விதவை (அல்லது விதவைகள் அனைவரும் சேர்ந்து) மற்றும் அவனுக்குப் பின்னர் வாழும் மகன்கள், மகள்கள் ஆகியோர் சமபாகம் பெறுகிற வகையில் பகிர்ந்தளிக்கப்படும் ; அவனுக்கு முன்னதாக இறந்துபோன அவனுடைய மகன்களின் கிளை வழி அதே போன்ற பாகத்தைப் பெறும் ;

(ii) முன்னதாக இறந்துபோன மகளின் கிளைவழி இறங்குரிமையர்களிடையே, அவளுக்குப் பின்னர் வாழும் மகன்கள், மகள்கள் ஆகியோர் சமபாகம் பெறும் வகையில் பகிர்ந்தளிக்கப்படும்.

இணைப்புப் பட்டியலின் வகை II இல் உள்ள இறங்குரிமையர்களிடையே சொத்துப் பகிர்ந்தளிப்பு.

11. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் சொத்து, இணைப்புப் பட்டியலின் வகை II இல் உள்ள பதிகை எதுவிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள இறங்குரிமையர்களிடையே, அவர்கள் சம பங்கு பெறும் வகையில், பகிர்வு செய்யப்படும்.

ஆண்வழி உறவினர், பெண் இடையிட்ட வழி உறவினர் ஆகியோரிடையே இறங்குரிமை முறை.

12. ஆண் வழி உறவினர்கள் அல்லது, நேர்வுக்கேற்ப, பெண் இடையிட்ட வழி உறவினர்கள் ஆகியோரிடையே அமையும் இறங்குரிமைமுறை இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமை விதிகளுக்கிணங்க, தீர்மானிக்கப்படும்;—

விதி 1.—இறங்குரிமையர்கள் இருவரில் ஏறுமுறை வரிசைநிலை குறைவாக உள்ளவர் அல்லது அத்தகைய வரிசை நிலை இல்லாதவர் முன்னுரிமை பெறுவர்.

விதி 2.—ஏறுமுறை வரிசைநிலை எண்ணிக்கை சமமாக இருக்குமிடத்து அல்லது இல்லாமல் இருக்குமிடத்து, இறங்குமுறை வரிசை நிலை குறைவாக உள்ள அல்லது அத்தகைய வரிசைநிலை இல்லாத இறங்குரிமையர் முன்னுரிமை பெறுவர்.

விதி 3.—விதி 1 அல்லது விதி 2 இன்படி இறங்குரிமையர்களில் ஒருவர் மற்றவரைவிட முன்னுரிமை கொண்டிராதவிடத்து, அவர்கள் அடைவது உடன் நிகழ்வதாக இருக்கும்.

உறவின் வரிசை நிலைக் கணிப்பு.

13. (1) ஆண்வழி உறவினர்கள் அல்லது பெண் இடையிட்ட வழி உறவினர்கள் ஆகியோரிடையே இறங்குரிமை முறையைத் தீர்மானிப்பதைப் பொறுத்த வரை, உறவுமுறை என்பது, உயில் எழுதிவைக்காமல் இறந்து போனவரிடமிருந்து தொடங்கி இறங்குரிமையர்களுக்கு ஏறுமுறை வரிசை நிலையிலோ, இறங்குமுறை வரிசை நிலையிலோ இரண்டின் அடிப்படையிலுமோ கணிக்கப்படும்.

(2) ஏறுமுறை வரிசை நிலைகளும் இறங்குமுறை வரிசை நிலைகளும், உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரையும் உள்ளிட்டுக் கணக்கிடப்படும்.

(3) ஒவ்வொரு தலைமுறையும் ஏறுமுறையாகவோ இறங்குமுறையாகவோ அமையும் ஒரு வரிசைமுறை ஆகும்.

ஓர் இந்துப் பெண்ணின் சொத்து அவளுடைய முழு உரிமைச் சொத்தாக இருக்கும்.

14. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்போ பின்போ ஓர் இந்துப் பெண்ணால் அடையப்பெற்று, அவளது உடைமையில் இருந்து வரும் சொத்து எதுவும், அதனுடைய வரையுரிமையராக அல்லாது முழுதுரிமையராகவே அவளால் வைத்துவரப்பெறும்.

விளக்கம்.—இந்த உட்பிரிவில் 'சொத்து' என்பது, ஓர் இந்துப் பெண், இறங்குரிமை வழியாகவோ உயில்வழியாகவோ, பாகப்பிரிவினையிலோ, அல்லது வாழ்க்கைப் பொருளுதவி அல்லது அதன் நிலுவைக்குப் பதிலாகவோ, அல்லது உறவினரான அல்லது உறவினரல்லாத நபர் எவரிடமிருந்தும் திருமணத்திற்கு முன்பு, திருமணத்தின்போது அல்லது திருமணத்திற்குப் பின்பு கொடையாகவோ, அல்லது தன் சொந்தத் திறமையினாலோ உழைப்பினாலோ, அல்லது விலைக்கு வாங்கியதாலோ நீடனுபோக உரிமையாலோ, அல்லது பிறவகை எதனாலோ அடைந்த அசைவியல் மற்றும் நிலையியல் சொத்து இரண்டையும் உள்ளடக்குவதுடன், இந்த சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு சீதனமாக வைத்துவரப்பட்ட சொத்து எதனையும் உள்ளடக்கும்.

(2) கொடை வழியாகவோ உயில் வழியாகவோ பிற முறையாவணம் எதனின் வழியாகவோ, அல்லது ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது ஆணையின்படியோ, அல்லது தீர்வத்தின்படியோ அடையப்பட்ட சொத்து எதனுக்கும், அந்தக் கொடையாவணம், உயில் அல்லது பிற முறையாவணம் அல்லது தீர்ப்பாணை, ஆணை அல்லது தீர்வம் இவற்றில் ஏதொன்றின் வரையுரைகளும், அந்தச் சொத்தின்மீதான உரிமை வரையுரிமை ஆகும் என்று வகுத்துரைக்குமிடத்து, உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எதுவும் பொருந்துறாது.

இந்துப் பெண்களைப் பொறுத்த இறங்குரிமைப் பொது விதிகள்.

15. (1) உயில் எழுதிவைக்காமல் இறந்துபோன ஓர் இந்துப் பெண்ணின் சொத்து, பிரிவு 16இல் விவரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க, இறங்கடைவு உறுவதாகும்.

(அ) முதலாவதாக, மகன்கள், மகள்கள் (முன்னதாகவே இறந்தபோன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கும்) கணவன் ஆகியோருக்கு ;

(ஆ) இரண்டாவதாக, கணவனின் இறங்குரிமையர்களுக்கு ;

(இ) மூன்றாவதாக, தாய், தந்தை ஆகியோருக்கு ;

(ஈ) நான்காவதாக, தந்தையின் இறங்குரிமையர்களுக்கு ;

(உ) கடைசியாக, தாயின் இறங்குரிமையர்களுக்கு.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,—

(அ) ஓர் இந்துப் பெண்ணால், அவளுடைய தந்தை அல்லது தாயிடமிருந்து இறங்குரிமை வழி அடையப்பெற்ற சொத்து எதுவும், இறந்துபோனவரின் மகன் அல்லது மகள் எவரும் (முன்னரே இறந்துபோன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கும்) உயிருடன் இல்லாதபோது, உட்பிரிவு(1)இல்

குறித்துரைக்கப்பட்டுள்ள வரிசை முறையில் குறிப்பிடப்பட்ட பிற இறங்குரிமையர்களுக்கு அன்றி, தந்தையின் இறங்குரிமையர்களுக்கு இறங்கடைவு உறுவதாகும் ; மற்றும்

(ஆ) ஓர் இந்துப் பெண்ணால், அவளுடைய கணவனிடமிருந்தோ கணவனின் தந்தையிடமிருந்தோ இறங்குரிமை வழியில் அடையப் பெற்ற சொத்து எதுவும், இறந்துபோனவரின் மகன் அல்லது மகள் எவரும் (முன்னரே இறந்துபோன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கும்) உயிருடன் இல்லாதபோது, உட்பிரிவு (1)இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வரிசை முறையில் குறிப்பிடப்பட்ட பிற இறங்குரிமையர்களுக்கு அன்றி, கணவனின் இறங்குரிமையர்களுக்கு இறங்கடைவு உறுவதாகும்.

ஓர் இந்துப் பெண்ணின் இறங்குரிமையர்களுக்கிடையே இறங்குரிமை வரிசை முறையும் பகிர்ந்தளிப்பு முறையும்.

16. பிரிவு 15இல் குறிப்பிடப்பட்டுள்ள இறங்குரிமையர்களுக்கிடையே இறங்குரிமை வரிசை முறையும் இறந்துபோனவரின் சொத்து அந்த இறங்குரிமையர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பும் பின்வரும் விதிகளுக்கிணங்க அமைவுறும்—

விதி 1.—பிரிவு 15இன் உட்பிரிவு 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இறங்குரிமையர்களுக்கிடையே, ஒரு பதிகையில் உள்ளவர்கள், அதனை அடுத்துவரும் பதிகையில் உள்ளவர்களைவிட முன்னுரிமை பெறுவர்; ஒரே பதிகையில் உள்ளவர்கள் அடைவது உடன் நிகழ்வதாக இருக்கும்.

விதி 2.—உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் இறப்பின் போது அவருக்கு முன்னரே இறந்துவிட்ட மகன் அல்லது மகள் விட்டுச் சென்ற குழந்தைகள் உயிருடன் இருக்குமிடத்து, இறந்துவிட்ட அந்த மகனின் அல்லது மகளின் குழந்தைகள் அடையும் பங்கானது, உயிலெழுதி வைக்காமல் இறந்து போனவரின் இறப்பின் போது அந்த மகன் அல்லது மகள் உயிருடன் இருந்தால் அந்த மகன் அல்லது மகள் பெற்றிருக்கக்கூடிய பங்காக இருக்கும்.

விதி 3.—உயில் எழுதிவைக்காமல் இறந்துபோன பெண்ணின் சொத்து, பிரிவு 15இன் உட்பிரிவு (1)இன் கூறுகள் (ஆ), (ஈ), (உ) ஆகியவற்றிலும், உட்பிரிவு (2) இலும் குறிப்பிடப்பட்டுள்ள இறங்குரிமையர்களுக்கு இறங்கடைவு உறும் முறையானது, அச்சொத்து அவளுடைய தந்தையின் அல்லது, தாயின் அல்லது, நேர்வுக்கேற்ப, கணவனின் சொத்தாக இருந்து, அந்நபர் அச்சொத்தினைப் பொறுத்து உயில் எழுதிவைக்காமல், அந்தப் பெண்ணின் இறப்பினை ஒட்டிஉடனே இறந்திருப்பாராயின், அச்சொத்தின் இறங்கடைவு எந்த வரிசை முறையில், மற்றும் எந்த விதிகளுக்கிணங்க இருக்குமோ, அதே முறையில் இருக்கும்.

மருமக்கள் தாயம் மற்றும் அளிய சந்தானம் சட்ட நெறிகளின் ஆளுகையில் வரும் நபர்களைப் பொறுத்த தனியுறு வகையங்கள்.

17. இந்தச் சட்டம் இயற்றப்பட்டிராவிடில் மருமக்கள்தாயம் சட்ட நெறியின் அல்லது அளியசந்தானம் சட்ட நெறியின் ஆளுகையில் இருந்திருக்கக்கூடிய நபர்கள் தொடர்பாக பிரிவுகள் 8, 10, 15, 23 ஆகியவற்றின் வகையங்கள் பின்வரும் வகையில் செல்திறன் பெறுவதாகும் :—

(i) பின்வருவது, பிரிவு 8 இன் உட்கூறுகள் (இ), (ஈ) ஆகியவற்றுக்குப்பதிலாக அமைக்கப்படுகிறது:—

"(இ) மூன்றாவதாக, இரு வகைகளில் எதனையும் சார்ந்த இறங்குரிமையர் எவரும் இல்லையெனில், அப்போது ஆண்வழி அல்லது பெண் இடையிட்ட வழி உறவினர்களுக்கு.

(ii) பின்வருவது, பிரிவு 15 இன் உட்பிரிவு 1 இன கூறுகள் (அ) முதல் (உ) வரை உள்ளவற்றிற்குப் பதிலாக அமைக்கப்படுகிறது;—

"(அ) முதலாவதாக, மகன்கள், மகள்கள் (முன்னரே இறந்துபோன மகனின் அல்லது மகளின் குழந்தைகள் உள்ளடங்கும்), தாய் ஆகியோருக்கு ;

(ஆ) இரண்டாவதாக, தந்தை, கணவன் ஆகியோருக்கு;

(இ) மூன்றாவதாக, தாயின் இறங்குரிமையர்களுக்கு;

(ஈ) நான்காவதாக, தந்தையின் இறங்குரிமையர்களுக்கு;

(உ) கடைசியாக, கணவனின் இறங்குரிமையர்களுக்கு.

(iii) பிரிவு 15 இன் உட்பிரிவு (2) இன் கூறு (அ) விட்டுவிடப்பட்டது.

(iv) பிரிவு 23 விட்டுவிடப்பட்டது.

### இறங்குரிமை தொடர்பான பொது வகையங்கள்

18. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவருடன் பிறவகையில் ஒரே தன்மையான உறவுடையவர்களில், ''ஒரே தந்தை இரு தாய் வழி உறவு மூலம்'' உறவு கொண்ட இறங்குரிமையர்களைவிட ''ஒரே தந்தை தாய் வழி உறவு'' மூலம் உறவு கொண்ட இறங்குரிமையர்கள் முன்னுரிமை பெறுவர்.

'' ஒரே தந்தை இரு தாய்வழி உறவை '' விட '' ஒரே தந்தை தாய் வழி உறவு '' முன்னுரிமை பெறுகிறது.

19. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் சொத்தினை இரண்டு அல்லது மேற்பட்ட இறங்குரிமையாகள் ஒருசேர அடைவார்களாயின், அவர்கள்

இரண்டு அல்லது மேற்பட்ட இறங்குரிமையர்கள் பொறுத் இறங்குரிமை முறை.

(அ) இந்தச் சட்டத்தில் பிறவாறு தெரிநிலையாக வகைசெய்யப் பட்டிருந்தால் அன்றி, கிளைக்கு ஒரு பங்கு என அல்லா மல் தலைக்கு ஒரு பங்கு என்கிற முறையிலும்.

(ஆ) கூட்டு நிலச் சொத்துரிமையினர் என அல்லாமல், பொதுநிலச் சொத்துரிமையினர் என்கிற முறையிலும் அந்தச் சொத்தினை அடைவர்.

20. உயில் எழுதி வைக்காமல் இறந்து போனவரின் இறப்பின்போது கருவில் இருந்து அவருடைய இறப்பிற்குப் பிறகு பிறந்த ஒரு ஆண் அல்லது பெண் குழந்தையானது அவ்வாறு உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் இறப்பிற்கு முன்னர் அக்குழந்தை பிறந்திருந்தால், அவருடைய சொத்துக்கு எத்தகைய இறங்குரிமை கொண்டிருக்குமோ அதே உரிமையை உடையதாகும்: அத்தகைய நேர்வில், உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவர் இறந்த தேதியிலிருந்தே செல் திறம் பெறுமாறு இறங்குரிமைவழி சொத்துரிமை உற்றடைவதாகக் கொள்ளப் படுத்தல் வேண்டும்.

கருவில் இருக்கும் குழந்தைக்கு உள்ள உரிமை.

21. இரண்டு நபர்கள் இறந்திருந்து, அவர்களில் ஒருவர் மற்றவருக்குப்பின் உயிருடன் இருந்தாரா என்பதையும், அவ்வாறாயின் அவர் யார் என்பதையும் நிச்சயிக்க முடியாத சூழ்நிலைகளில் அத்தகைய இறப்புகள் நிகழ்ந்திருக்குமிடத்து, சொத்துக்கான இறங்குரிமையைப்பொறுத்தவரை, மாறாக எதுவும் மெய்ப்பிக்கப் படும்வரையில், மூத்தவருக்குப் பின்னர் இளையவர் உயிருடன் இருந்தார் என்று துணிபு கொள்ளுதல் வேண்டும்.

உடன் நிகழ்வதான இறப்புகளின் நேர்வில் மேற்கொள்ள வேண்டிய துணிபு.

22. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பிறகு உயில் எழுதி வைக்காமல் இறந்துபோன ஆண் அல்லது பெண்ணுக்கு நிலையியல் சொத்து எதனிலும் உள்ள உரித்தம் அல்லது அவன் அல்லது அவள் தனித்தோ பிறருடன் சேர்ந்தோ நடத்திவந்த ஆகுதொழிலிலுள்ள உரித்தம் எதுவும், இணைப்புப்பட்டி யலில் வகை 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இரண்டு அல்லது மேற்பட்ட இறங்குரிமையர்களுக்கு இறங்கடைவு உறும்போது அத்தகைய ஆண் அல்லது பெண் இறங்குரிமையாளர்களில் எவர் ஒருவரும் அச்சொத்தில் அல்லது ஆகு தொழிலில் தனக்குள்ள உரித்தத்தை மாற்றல் செய்யக் கருதுமிடத்து அவ் வுரித்தத்தைப் பெறுவதற்குப் பிற இறங்குரிமையர்கள் முன்னுரிமை உடையர் வர்கள் ஆவர்.

குறித்த சில நேர்வுகளில் சொத்தினைப் பெறுவதற்கான முன்னுரிமை.

(2) இறந்துபோனவரின் சொத்திலுள்ள உரித்தம் மாற்றல் செய்யப் படுவதற்கான மறுபயன் பொறுத்துத் தரப்பினர்களுக்கிடையே உடன்பாடு எதுவும் இல்லாதபோது, இது பொருட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் அந்நீதிமன்றத்தால் அம்மறுபயன் தீர்மானிக்கப்படும் ; அந்த உரித்தத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளக் கருதும் நபர் எவரும், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட மறுபயன் கொடுத்து, வாங்கிக்கொள்ள விரும்ப வில்லை எனில், அந்நபர் அந்த விண்ணப்பத்திற்கான அல்லது அதன் சார்வுறலான செலவுத்தொகைகளைச் செலுத்தக் கடப்பாடுடையவர் ஆவார்.

(3) இணைப்புப்பட்டியலில் வகை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள இறங்குரிமையர்களில், இந்தப் பிரிவின்படி உரித்தம் எதனையும் பெறுவதற்கு முனைவோர் இருவர் அல்லது மேற்பட்டவர்களாயிருப்பின், அந்த மாற்றலுக்கு மறுபயனாக மற்றவர்களைவிட அதிகமாக கொடுக்க முனைகிற இறங்குரிமையரே முன்னுரிமை பெறுவர்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் ''நீதிமன்றம்'' என்பது எந்த நீதிமன்றத்தின் அதிகாரஎல்லைக்குள் நிலையியல் சொத்து அமைந்துள்ளதோ அல்லது ஆகுதொழில் நடைபெற்றுவருகிறதோ, அந்நீதிமன்றம் என்று பொருள்படும்; மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இதன் பொருட்டுக் குறித்துரைக்கும் பிற நீதிமன்றம் எதனையும் உள்ளடக்கும்.

**குடியிருப்பு வீடுகளைப் பொறுத்த தனியுறு வகையம்.**

23. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோன இந்து ஆண் அல்லது பெண் ஒருவர், இணைப்பட்டியலில் வகை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆண் மற்றும் பெண் இறங்குரிமையர்களை விட்டுச் சென்றவிடத்தும், அவன் அல்லது அவளுடைய சொத்தில், அடங்கியுள்ள வீட்டில் முழுமையாக அவருடைய குடும்பத்தினரே குடியிருந்துவருமிடத்தும், அப்போது, இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அந்தக் குடியிருப்பு வீட்டில் முறையே தங்களுக்குள்ள பங்குகளைப் பிரித்துக்கொள்ள ஆண் இறங்குரிமையர்கள் விரும்பும் வரையில், அத்தகைய பெண் இறங்குரிமையர் எவருக்கும் அந்தக் குடியிருப்பு வீட்டில் பாகப்பிரிவினை கோரும் உரிமை எழுவதில்லை, ஆனால், அதில் குடியிருப்பதற்கு அந்தப் பெண் இறங்குரிமையர் உரிமைகொண்டவர் ஆவார்.

வரம்புரையாக : அந்தப் பெண் இறங்குரிமையர் ஒரு மகளாக இருப்பின், அவள் திருமணமாகாதவளாக அல்லது அவளுடைய கணவனால் கைவிடப்பட்டவளாக, அல்லது கணவனிடமிருந்துப் பிரிந்து வாழ்பவளாக, அல்லது விதவையாக இருக்கும்போது மட்டுமே, அந்த வீட்டில் அவள் குடியிருப்பதற்கு உரிமை கொண்டவள் ஆவாள்.

**மறு மணம் செய்து கொள்ளும் குறித்த சில விதவைகள், அவர்கள் விதவைகள் என்ற முறையில் இறங்குரிமை பெறுதலாகாது.**

24. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவருக்கு முன்னரே இறந்துபோன மகனின் விதவை, முன்னரே இறந்துபோன மகனுடைய மகனின் விதவை என்ற முறையில் அவருக்கு உறவினரான அல்லது உடன் பிறந்தவரின் விதவை என்ற முறையில் அவருக்கு உறவினரான இறங்குரிமையர் எவரும், இறங்குரிமையில் எழும்போது, மறுமணம் செய்து கொண்டவராயிருந்தால், உயில் எழுதி வைக்காமல் இறந்துபோனவரின் சொத்துக்கு, அத்தகைய விதவை என்ற முறையில் அவர் உரிமைக்கொண்டவர் ஆவார்.

**கொலைக் குற்றவாளி தகுதிப்பாட்டை இழத்தல்.**

25. கொலைக் குற்றம் இழைத்த அல்லது கொலைக்கு உடந்தையாயிருந்த குற்றத்தை இழைத்த நபர் ஒருவர், அவ்வாறு கொலை செய்யப்பட்டவரின் சொத்துக்கோ, எந்தச் சொத்தினைப் பொறுத்து இறங்குரிமை பெறுவதற்கு ஏதுவாக அவன் அல்லது அவள் அந்தக் கொலைக் குற்றத்தை அல்லது அதற்கு உடந்தையாயிருந்த குற்றத்தை இழைத்தாரோ அந்தச் சொத்துக்கோ இறங்குரிமை பெறும் தகுதிப்பாட்டை இழப்பார்.

**சமயம் மாறியவரின் வழிவந்தவர்கள் தகுதிப்பாட்டை இழத்தல்.**

26. இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்போ பின்போ இந்து ஆண் அல்லது பெண் ஒருவர் வேறு ஒரு சமயத்திற்கு மாறுவதன் மூலம் இந்துவாக இருப்பது அற்றுப்போனவிடத்து அல்லது அற்றுப் போகிறவிடத்து, அத்தகைய சமயமாற்றத்திற்குப் பின்னர் அவன் அல்லது அவளுக்குப் பிறந்த குழந்தைகளும் அவர்களுடைய வழிவந்தவர்களும், இறங்குரிமை எழும்போது அந்தக் குழந்தைகளும் அவர்களின் வழிவந்தவர்களும் இந்துவாக இருந்தாலன்றி, அவர்களுடைய இந்து உறவினர்களில் எவருடைய சொத்திலும் இறங்குரிமை பெறும் தகுதிப்பாட்டை இழப்பர்.

**இறங்குரிமை தகுதிப்பாடு இழந்தவராகும் போது இறங்குரிமை.**

27. இந்தச் சட்டத்தின்படி சொத்து எதனிலும் இறங்குரிமை பெறுவதினின்றி நபர் எவரும் தகுதிப்பாடு இழந்தவராக ஆகிவிடுவாராயின் அந்நபர் உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவருக்கு முன்னரே இறந்துவிட்டிருந்தாற்போன்று அந்தச் சொத்தில் இறங்கடைவு அமைவதாகும்.

**நோய், உடல் குறைபாடு முதலியவற்றால் தகுதிப்பாடு இழப்பதில்லை.**

28. நபர் எவரும், நோய், உடல் குறைபாடு அல்லது உடல் ஊனம் இவற்றில் எதனின் காரணமாகவும் அல்லது இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறல்லாமல் பிற காரணம் எதனாலும், சொத்து எதிலும் இறங்குரிமை பெறுவதற்குத் தகுதிப்பாடு இழப்பதில்லை.

அரசு உறுபொருள்கள்.

29. உயில் எழுதிவைக்காமல் இறந்துபோன ஆண் அல்லது பெண் ஒருவர் தனக்குப் பிறகு தன் சொத்தில் உரிமை பெற இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க தகுதிப்பாடுடைய இறங்குரிமையர் எவரையும் விட்டுச் செல்லவில்லையெனில், அத்தகையவரின் சொத்தின் இறங்கடைவு அரசாங்கத்திற்கு உறுவதாகும். மேலும், இறங்குரிமையர் ஒருவர் கட்டுப்பட்டிருக்கக்கூடிய கடமைப் பொறுப்புகளுக்கும், கடப்பாடுகளுக்கும் உட்பட்டு, அந்தச் சொத்தினை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். இறங்குரிமையர்களே இல்லாத நிலையில்.

## * அத்தியாயம் II-(அ)

### எஞ்சுநருரிமை வழி இறங்குரிமை

29 (அ). இந்தச் சட்டத்தின் பிரிவு 6 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,— பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் மகளுக்குச் சம உரிமைகள்.

(i) மிதாக்ஷர சட்ட நெறியின் ஆளுகைக்குள் வரும் ஒரு இந்துக் கூட்டு குடும்பத்தில் உள்ள பிறப்புவழி பங்குரிமையர் ஒருவரின் மகள், அவளுக்குற்ற பிறப்புரிமையாக, ஒரு மகனுக்குள்ள உரிமையைப் போன்றே பிறப்புவழி பங்குரிமையராக ஆவார், அவள் ஒரு மகனாக இருந்திருந்தால், பிறப்பு வழி பங்குரிமை சொத்தில் எத்தகைய உரிமைகளை அடைவாளோ, அதே உரிமைகளை அடைவாள். அதில் எஞ்சுநருரிமை வழிகோரும் உரிமையும் உள்ளடங்கும். மேலும், அவள், அவற்றைப் பொறுத்து மகனுக்குள்ளது போன்ற அதே கடப்பாடுகளுக்கும், தகவுக்கேடுகளுக்கும் உட்பட்டவள் ஆவாள்.

(ii) அத்தகைய இந்துக் கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படும் போது, பிறப்புவழி பங்குரிமைச் சொத்து, ஒரு மகனுக்கு ஒதுக்கப் படுவது போன்ற அதே பங்கினை மகளுக்கும் ஒதுக்கும் வகையில், பகிர்வு செய்யப்படும் :

வரம்புரையாக : முன்னரே இறந்துபோன ஒரு மகன் அல்லது முன்னரே இறந்துபோன ஒரு மகள் பாகப்பிரிவினையின் போது உயிருடன் இருந்திருந்தால், அவனோ, அவளோ அடைந்திருக்க கூடிய பங்கு, இறந்துபோன அந்த மகனுக்கு அல்லது முன்னரே இறந்து போன அந்த மகளுக்குப் பின்னர் வாழும் குழந்தை களுக்கு ஒதுக்கப்படும் :

மேலும் வரம்புரையாக : முன்னரே இறந்துபோன மகனின் அல்லது முன்னரே இறந்துபோன மகளின் குழந்தை ஒன்று முன்னரே இறந்து போயிருக்குமிடத்து, அக்குழந்தை பாகப் பிரிவினையின்போது உயிருடன் இருந்தால் எந்த அளவு பங்கு அதற்கு ஒதுக்கப்பட்டிருக்குமோ அந்த அளவு பங்கினை அக் குழந்தை விட்டுச் சென்ற குழந்தைக்கு ஒதுக்கப்படும்.

(iii) கூறு (1)இன் வகையங்களின் பயனாக ஓர் இந்துப்பெண் உரிமை கொண்டிருக்கும் சொத்து எதுவும், அவளால், பிறப்பு வழி பங்குரிமைக்குற்ற விளைவுகளுடன் வைத்துவரப்படும். மேலும், இந்தச் சட்டத்தில், அல்லது நிலவுறு பிற சட்டம் எதனிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அவளால், உயில்வழியோ பிற விருப்பாவண ஏற்பாட்டின்படியோ அது அயலமைவு செய்யப்படதக்கது எனவும் கருதப்படும்.

(iv) இந்த அத்தியாயத்தில் உள்ள எதுவும், இந்து இறங்குரிமை (தமிழ் நாடு திருத்தச்) சட்டம், 1989இன் தொடக்கத் தேதிக்கு முன்பு திருமணம் செய்யப்பெற்ற மகளுக்குப் பொருந்துறாது.

(v) கூறு (ii)இல் உள்ள எதுவும், இந்து இறங்குரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 1989இன் தொடக்கத் தேதிக்கு முன்பு ஏற்பட்ட பாகப்பிரிவினைக்குப் பொருந்துறாது.

* இந்து இறங்குரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 1989 இனால் இந்த அத்தியாயம் புதுப்பிக்கப்பட்டது.

இறப்பின்போது எஞ்சுநருரிமை வழி இறங்கடைவு உறும் உரித்தம்.

29ஆ. இந்து இறங்குரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 1989இன் தொடக்கத் தேதிக்குப் பின்னர் இறந்து போகும் ஓர் இந்துப் பெண், அவளது இறப்பின்போது, பிரிவு 29இன் வகையங்களின் பயனாக மிதாக்ஷர பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அவளுக்குள்ள உரித்தத்தை விட்டுச்செல்வாளாயின், அச் சொத்தில் அவளுக்குள்ள உரித்தம் அவளுக்குப் பின்னர் வாழும் பிறப்புவழி பங்குரிமை உறுப்பினர்களுக்கு எஞ்சுநருரிமை வழி இறங்கடைவு உறுமே அன்றி, இந்தச் சட்டத்திற்கிணங்க அல்ல :

வரம்புரையாக : அவ்வாறு இறந்துபோனவள் ஒரு குழந்தையை அல்லது தனக்கு முன்னரே இறந்துபோன குழந்தையின் குழந்தையை விட்டுச் சென்றிருப்பாளாயின், மிதாக்ஷர பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அவளுக்குள்ள உரித்தம், இந்தச் சட்டத்தின்படி உயில்வழி அல்லது உயிலில்லாவழி இறங்கடைவாக உறுமே அன்றி, எஞ்சுநருரிமையாக அல்ல.

விளக்கம் I.—இந்தப் பிரிவினைப் பொறுத்தவரை, மிதாக்ஷர சட்டத்தின்படி பிறப்புவழிப் பங்குரிமைச் சொத்தில் உரிமை கோருகிற ஓர் இந்துப் பெண்ணுக்குள்ள உரித்தம் என்பது, அச்சொத்தில் அவள் பாகப்பிரிவினை கோருவதற்கு உரிமை கொண்டிருந்தாலும், இல்லாவிடிலும், அவளது இறப்பை ஒட்டி முன்பு அச்சொத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், அவளுக்கு அச்சொத்தில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பங்காகக் கொள்ளப்படும்.

விளக்கம் II.—இந்தப் பிரிவின் வரம்புரையில் அடங்கியுள்ள எதுவும் இறந்து போனவரின் இறப்புக்கு முன்னரே பிறப்புவழி பங்குரிமை கொண்டிருந்த குடும்பத்திலிருந்து பிரிந்து சென்றுவிட்ட ஒரு ஆணை அல்லது பெண்ணை அல்லது அவனுடைய அல்லது அவளுடைய இறங்குரிமையர்களில் எவர் ஒருவரையும், உயில் எதுவும் எழுதப்படாத நிலையில், அதில் குறிப்பிடப்பட்ட உரித்தத்தில் ஒரு பங்கினைக் கோருவதற்கு இயல்விப்பதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

குறித்தசில நேர்வுகளில், சொத்தினைப் பெறுவதற்கான முன்னுரிமை.

29இ. (1) இந்து இறங்குரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1989இன் தொடக்கத் தேதிக்குப் பிறகு உயில் எழுதி வைக்காமல் இறந்துபோன ஆணுக்கு அல்லது பெண்ணுக்கு நிலையியல் சொத்து எதனிலும் உள்ள உரித்தம், அல்லது அவர் அல்லது அவள் தனித்தோ பிறருடன் சேர்ந்தோ நடத்திவந்த ஆகுதொழிலிலுள்ள உரித்தம் எதுவும், பிரிவு 29அ அல்லது பிரிவு 29ஆ இன்படி இரண்டு அல்லது மேற்பட்ட இறங்குரிமையர்களுக்கு இறங்கடைவு உறும்போது, அத்தகைய ஆண் அல்லது பெண் இறங்குரிமையர்களில் எவர் ஒருவரும் அச் சொத்தில் அல்லது ஆகுதொழிலில் தனக்குள்ள உரித்தத்தை மாற்றல் செய்யக் கருதுமிடத்து, அவ்வுரித்தத்தைப் பெறுவதற்குப் பிற இறங்குரிமையர்கள் முன்னுரிமை உடையவர்கள் ஆவர்.

(2) இறந்துபோனவரின் சொத்திலுள்ள உரித்தம் மாற்றல் செய்யப்படுவதற்கான மறுபயன் பொறுத்துத் தரப்பினர்களுக்கிடையே உடன்பாடு எதுவும் இல்லாதபோது, இது பொருட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அந்நீதிமன்றத்தால், அம்மறுபயன் தீர்மானிக்கப்படும், அந்த உரித்தத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளக் கருதும் நபர் எவரும், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட மறுபயன் கொடுத்து வாங்கிக்கொள்ள விரும்பவில்லை எனில், அந்நபர் அந்த விண்ணப்பத்திற்கான அல்லது அதன் சார்வுறலான செலவுத் தொகைகளைச் செலுத்தக் கடப்பாடுடையவர் ஆவார்.

(3) இந்தப் பிரிவின்படி உரித்தம் எதனையும் பெறுவதற்கு முனையும் இறங்குரிமையர்கள் இருவர் அல்லது மேற்பட்டவர்களாயிருப்பின், அந்த மாற்றலுக்கான மறுபயனாக மற்றவர்களைவிட அதிகமாகக் கொடுக்கமுனைகிற இறங்குரிமையரே முன்னுரிமை பெறுவார்.

விளக்கம்.—இந்தப் பிரிவில், 'நீதிமன்றம்' என்பது, எந்த நீதிமன்றத்தின் அதிகாரஎல்லைக்குள் நிலையியல் சொத்து அமைந்துள்ளதோ அல்லது ஆகுதொழில் நடைபெற்றுவருகிறதோ, அந்த நீதிமன்றம் என்று பொருள்படும் : மாநில அரசாங்கம், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இதன் பொருட்டுக் குறித்துரைக்கும் பிற நீதிமன்றம் எதனையும் உள்ளடக்கும்.

## அத்தியாயம் III

### உயில்வழி இறங்குரிமை

உயில்வழி இறங்குரிமை.

30. உயில்வழியாக அல்லது பிற விருப்பாவண ஏற்பாட்டின் வழியாக அயலடைவு செய்யப்படத்தக்க சொத்து எதனையும், இந்து ஒருவர் இந்திய இறங்குரிமைச் சட்டம், 1925இன் வகையங்களுக்கு இணங்கவோ இந்துக்களுக்குப் பொருந்துறத்தக்க நிலவுறும் பிற சட்டம் எதனின் வகையங்களுக்கிணங்கவோ அயலடைவு செய்யலாம். 39/1925.

விளக்கம்.—மிதாக்ஷர சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் இந்து ஆண் ஒருவருக்குள்ள உரித்தமோ, தரவாடு, தாவழி, இல்லம், குடும்பம், அல்லது காவரு சொத்தில், அதனைச் சார்ந்த உறுப்பினர் ஒருவருக்குள்ள உரித்தமோ, இந்தச் சட்டத்தின் அல்லது நிலவுறு பிற சட்டம் எதனிலும் உள்ள எது எவ்வாறிருப்பினும் இந்த உட்பிரிவின் பொருள்படி அவளாலோ அவனாலோ அயலடைவு செய்யப்படத்தக்க சொத்தாகக் கொள்ளப்படும்.

## அத்தியாயம் IV

### நீக்கறவுகள்

**31.** நீக்கறவு மற்றும் திருத்தம்செய் சட்டம் 1960 (58/1960), பிரிவு 2, மற்றும் முதல் இணைப்புப் பட்டியல், இவற்றினால்; நீக்கறவு செய்யப்பட்டது.

## இணைப்புப் பட்டியல்

(பிரிவு 8ஐப் பார்க்க)

### வகை I மற்றும் வகை II இறங்குரிமையங்கள்

#### வகை I

மகன்; மகள்; விதவை; தாய்; முன்னரே இறந்துபோன மகனின் மகன்; முன்னரே இறந்துபோன மகனின் மகள்; முன்னரே இறந்துபோன மகளின் மகன்; முன்னரே இறந்துபோன மகளின் மகள்; முன்னரே இறந்துபோன மகனின் விதவை; முன்னரே இறந்துபோன மகனுடைய இறந்துபோன மகனின் மகன்; முன்னரே இறந்துபோன மகனுடைய இறந்துபோன மகனின் மகள்; முன்னரே இறந்துபோன மகனுடைய மகனின் விதவை.

#### வகை II

I. தந்தை.

II. (1) மகனுடைய மகளின் மகன்.

(2) மகனுடைய மகளின் மகள்.

(3) உடன் பிறந்தவன்.

(4) உடன் பிறந்தவள்.

III (1) மகளுடைய மகனின் மகன்.

(2) மகளுடைய மகனின் மகள்.

(3) மகளுடைய மகளின் மகன்.

(4) மகளுடைய மகளின் மகள்.

IV (1) உடன் பிறந்தவனின் மகன்.

(2) உடன் பிறந்தவளின் மகன்.

(3) உடன் பிறந்தவனின் மகள்.

(4) உடன் பிறந்தவளின் மகள்.

V. தந்தையின் தந்தை, தந்தையின் தாய்.

VI. தந்தையின் விதவை, உடன் பிறந்தவனின் விதவை.

VII. தந்தையின் உடன் பிறந்தவன், தந்தையின் உடன் பிறந்தவள்.

VIII. தாயின் தந்தை, தாயின் தாய்.

IX. தாயின் உடன் பிறந்தவன், தாயின் உடன் பிறந்தவள்.

விளக்கம்.—இந்த இணைப்புப் பட்டியலில், உடன் பிறந்தவனை அல்லது உடன் பிறந்தவளைச் சுட்டும் குறிப்புகள், ''ஒரே தாய் இரு தந்தை வழி உறவு'' கொண்ட உடன் பிறந்தவனை அல்லது உடன் பிறந்தவளைச் சுட்டும் குறிப்புகளை உள்ளடக்குவதில்லை.